# வவுனியா பேயாடிகூழாங்குளம் படையினர் கடும் ஷெல் தாக்குதல், பல வீடுகள் சேதம்

வவுனியா பேயாடிக் கூழாங்குளம் காவலரணிலிருந்து நேற்று பிற்பகல் கடும் ஷெல் தாக்குதல் நடைபெற்றது. இதனால் பொதுமக்களின் பல வீடுகள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சுமார் ஒருமணிநேரமாக நடைபெற்ற இந்த ஷெல் தாக்குதலினால் பல பொதுமக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியவண்ணமிருந்தனர். இதே வேளை பட்டினுச்சூர் என்ற பகுதியிலிருந்த காவலரண் இராணுவத்தினர் வெளியேறி பட்டினுச்சூர் கிராமத்தை சுற்றிவளைத்தனர். இதன் போது முன்னர் வெளியேறி மீண்டும் தமது வீடுகளை பார்க்க வந்திருந்த பொதுமக்கள் படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்களில் ஏழு பேர் படையினரால் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 5 - 00

# முரசொலி

முரசு 06 ஒலி 24 பிரசோற்பத்தி மார்கழி 06 (21 12 1991) சனி

## பல்கலைக் கழகத்தில் ஆசிரியர்கள் பயில கல்வி அமைச்சு அனுமதி தேவை

கல்வி அமைச்சின் அனுமதியின்றி ஆசிரியர்கள் பல்கலைக்கழகங்களில் உள்வாரியாகப் பதிவு செய்து கற்பது தவிர்க்கப்பட வேண்டுமென பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் பலர் பல்கலைக் கழகங்களில் பதிவு செய்து உள்வாரியாகப் படித்துக் கொண்டு பாடசாலைகளில் ஆசிரியர்களாகச் சேவையாற்றி வருவதாகவும் இப்படிச் செய்வது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் கல்வி அமைச்சின் அனுமதியைப் பெற்றே இவ்வாறு படிக்கலாமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரிவில் அமைச்சின் அனுமதியின்றி பல்கலைக் கழகங்களில் படிக்கும் ஆசிரியர்கள் இருந்தால் அவர்களது விவரங்களைத் தமது —40 ஆம் பக்கம் பார்க்க

## சினைப்பர் தாக்குதலில் பத்தைமேனியில் 4படையினர்பலி

பலாலி இராணுவ முகாமின் பத்தைமேனி காவலரண் படையினர் மீது நேற்று ஒரு தலைப்புலிகள் சினைப்பர் தாக்குதல் நடத்தினர்.

நேற்றுக் காலை 10. 30 மணியளவில் காவல் கடமையிலீடுபட்டிருந்த படையினர் மீது புலிகள் குறிபார்த்து சூடு நடத்தியதில் 4சிப்பாய்கள் பலியாகினர்.

—04 ஆம் பக்கம் பார்க்க

## மாகியப்பிட்டியில் ஹெலி சூடு ஒருவர் காயம், வீடுகள் சேதம்

நேற்றுமாலை ஐந்துமணியளவில் மாகியப்பிட்டிப்பகுதியில் ஹெலி ஹெப்டர் ஒன்று வட்டமிட்டு குடிமனைகளை நோக்கி பலத்த துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டதில் அப்பகுதியில் ஒருவர் படுகாயமடைந்தநிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாகியப்பிட்டியைச் சேர்ந்த

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் மருந்துகள் பற்றாக்குறை

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்து வகைகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் நோயாளர் அவதியுற்று வருகின்றனர்.

குழந்தைகளுக்கான தடுப்பூசி மருந்துகளின்றி தாய்மார் கவலையடைந்துள்ளனர்.

இடம், மருந்துப் பற்றாக்குறை பற்றி மேலிடத்திற்கு

—04 ஆம் பக்கம் பார்க்க

## ஏற்பு ஊசி மருந்து இன்றி நோயாளர் பாதிப்பு

யாழ் பெரியாஸ்பத்திரி ... ளர்கள் பாதிக்கப்பட்டிருந்...

★ சார்க் அமைப்பின் நாடுகளில் மனித உரிமை மீறப்படுகிறதாம்

# மேற்குநாடுகள் நிதியுதவி வழங்க நிபந்தனை!

## மாநாட்டில் கலந்து கொள்ள இந்தியப் பிரதமர் இன்று காலை வருவார்

சார்க் அமைப்பின் நாடுகளுக்கு நிதி மற்றும் உதவிகளை வழங்குவதற்கு மேற்குலக நாடுகள் மனித உரிமைகள் மீறப்படக் கூடாதென்ற நிபந்தனையை முன்வைப்பதற்கு சார்க் நாடுகளின் ஏழு வெளியுறவு அமைச்சர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

உதவி வழங்க மனித உரிமை மீறல் குற்றச்சாட்டை முன்வைக்கும் மேற்குலக நாடுகளின் கட்டுப்பாடுகளை கண்டிப்பதுடன் கவலையையும் தெரிவிக்கும் பிரேரணை ஒன்று நேற்று கொழும்பில் கூடிய சார்க் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களால் இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு நிறைவேறியதாக தெரிவிக்கப்படுகிறது.

### தலைவர்கள் வந்தனர்

இதனிடையே இன்றுகாலை 10 மணிக்கு கொழும்பில் ஆரம்பமாகவுள்ள ஆறாவது ஒருநாள் சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவென நேபாள பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா, பூட்டான் மன்னர் வாங்சுக், மாலைதீவு ஜனாதிபதி கயூம், பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதாஸியா

—04 ஆம் பக்கம் பார்க்க

## நக்ஸலைட்டுக்களால் ஆந்திராவில் ஹர்த்தால்

ஆந்திரப் பிரதேசத்தில் மக் ... பித்திருந்ததாக தெரிவிக்கப்...

## 40 ஆயிரம் இலங்கையர்க்கு குவைத்தில் மீண்டும் வேலைவாய்ப்பு

யாழ் பெரியாஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவில் கடந்த மூன்றுவாரங்களுக்கு மேலாக ஏற்புத்தடுப்பூசி மருந்து இல்லாததையடுத்து பலநூற்றுக்கணக்கான நோயாளர்கள் பாதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

நேற்றிலிருந்து ஏற்புத்தடுப்பூசி மருந்து மிகச் சொற்ப அளவில் வெளிநோயாளர்

—04 ஆம் பக்கம் பார்க்க

ஆந்திரப் பிரதேசத்தில் மக்கள் போராட்டக்குழு என்ற நக்ஸலைட் குழுவால் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தாலினால் அம்மா நிலம் ஸதம்

பித்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று வனத்துறை பாதுகாப்பு அலுவலகம் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது நேற்று

—04 ஆம் பக்கம் பார்க்க

## குவைத்தில் மீண்டும் வேலைவாய்ப்பு

வளைகுடா யுத்தத்திற்குப் பின்னர் சுமார் நாற்பது ஆயிரம் இலங்கையர்கள் குவைத்தில் வேலை வாய்ப்புப் பெற்று அங்கு சென்றுள்ளனர்.

வளைகுடா யுத்தத்தினால் குவைத்திலிருந்து நாடு திரும்பிய 76 ஆயிரம் பேரிலும் கணிசமானோர் வேலை வாய்ப்புப் பெற்று மீண்டும்

—04 ஆம் பக்கம் பார்க்க

# சோவியத்தின் செங்கொடி இந்தியாவில் இறங்கியது

கடந்த பல ஆண்டுகளாக சோவியத் யூனியனின் நட்பு நாடாக இருந்த இந்தியா நேற்றுடன் சோவியத் யூனியனின் செங்கொடியை இறக்கியது.

இவ்வருட இறுதியுடன் சோவியத் யூனியன் கலைக்கப்பட்டு அங்குள்ள குடியரசுகள் தனித்தனியாக பிரிவுள்ளது தெரிந்ததே.

நேற்று புதுடில்லியில் உள்ள சோவியத் தூதரகத்தில் பறந்து கொண்டிருந்த சுதியல் அரிவாள் பொறிக்கப்பட்ட செங்கொடி இறக்கப்பட்டு ரஷ்ய குடியரசின் சிவப்பு, வெள்ளை, நீல நிற மூவர்ண கொடி ஏற்றப்பட்டது.

### வரலாறுடன் கலந்தது

இதேவேளை சோவியத் யூனியன் கலைவது குறித்து கருத்து வெளியிட்ட ஜனாதிபதி ''கொர்பசேவ்'' சோவியத் வரலாற்றுடன் கலந்து விட்டது என்றார்.

### கொர்பசேவுக்கு இடமில்லை

இத்தாலி (சென்றுள்ள ரஷ்ய குடியரசின் தலைவர் பொரிஸ் யெல்சின் தாம் புதிதாக குடியரசுகளை இணைத்து உருவாக்கியுள்ள குடியரசுகளின் பொதுநல அமைப்பில் கொர்பசேவுக்கு இடமில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

யெல்சின் இதுவரை கொர்பசேவ் கூட்டிப்பாட்டிலிருந்த

—04 ஆம் பக்கம் பார்க்க

### ஹெலி சூடு

வலிகாமம் பகுதியில் நேற்று மாலை ஹெலிகப்டர் திடீரென துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. சேத விவரம் தெரிவிக்கப்படவில்லை. (06)

### படையினர் சேதமாக்கினர்

வளலாய்ப் பகுதியில் மக்கள் கைவிட்டு வந்துள்ள வீடுகள், வெங்காயம், மிளகாய் போன்றவற்றை அங்கு நிலைகொண்டுள்ள படையினர் சேதமாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது 06

### இலவசமாக உரம்

கிளிநொச்சிப்பகுதியில் நெற்செய்கையை ஊக்குவிக்கும் முகமாக கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கம் அப்பகுதி விவசாயிகளுக்கு இலவசமாக உரவகைகளை வழங்கியுள்ளது. 14

## ஆயர் தியோகுப்பிள்ளைக்கு குருமுதல்வர் புகழாரம்

கடந்த 50 ஆண்டுகளாக, 25 வருடகாலம் குருவாகவும், 25 வருடகாலம் ஆயராகவும் இறைவனின் நற்செய்தியை பரப்பும் பணியை யாவரும் மெச்சத்தக்க விதத்தில் செய்து வருகிறார் யாழ் மறைமாவட்ட ஆயர் கலாநிதி வணதியாம்பிள்ளை தியோகுப்பிள்ளை, ஆண்டகை

யாழ் ஆயரின் குருத்துவப் பொன் விழாவையும், அதே சமயம் ஆயராக தொண்டாற்றிய வெற்றி விழாவையும் முன்னிட்டு நேற்று முன்தினம் காலை யாழ் பேராலயத்தில் நடைபெற்ற திருப்பலியின்

—04 ஆம் பக்கம் பார்க்க

## மாவீரர் தினக்கலை நிகழ்ச்சிகளை மீண்டும் காண வாய்ப்பு!

வேலணைக்கோட்ட கல்வி அபிவிருத்திக்கழகம் 28 12 91 இல் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கலை நிகழ்ச்சி ஒன்றை நிதி உதவிக் காட்சியாக நடாத்த ஏற்பாடு செய்து வருகின்றது.

மாவீரர் தினக்கொண்டாட்டங்களில் இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்ச்சிகள் இதில்

—04 ஆம் பக்கம் பார்க்க

# நாடு திரும்பும் அகதிகள்

# வீடுகளுக்கு செல்ல அனுமதியில்லை

## முதலில் முகாம்களிலேயே தங்கவைக்கப்படுவாராம்

தமிழகத்திலிருந்து நாடு திரும்பும் ஈழ அகதிகள் உடனடியாக மீளக்குடியமர்த்தப் படமாட்டார்கள்.

அவர்கள் முதலில் முகாம்களில் தங்கவைக்கப்படுவார்கள் பின்னர் நிலைமையைப் பொறுத்தே நாடுதிரும்பியவர்கள் அவர்களது முன்னைய பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு மீளக்குடியமர்த்தப் படுவார்கள்.

### மன்னாரில் இருந்தும் . . .

மன்னார்த் தீவில் இருந்து நான்கு லீற்றர் மண்ணெண்ணெய் கொண்டு செல்வதற்கு இராணுவம் அனுமதி வழங்கி உள்ளது.

அத்துடன் நான்கு சவர்க்காரக் கட்டிகள் எடுத்துச் செல்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (23)

எனினும் மன்னார் அகதிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் இறங்குதுறையிலிருந்து தத்தமது பகுதிகளுக்குச் சென்று மீளக்குடியமர அனுமதிக்கப்படுவர்.

பாராளுமன்றத்தில் புனர்வாழ்வு அமைச்சர் தயாரத்ன இத்தகவல்களைத் தெரிவித்தார்.

# மரதன் ஓட்டம் மூலம் 'சாவ்'தீபம் கொழும்புக்கு

சாவ் விளையாட்டுப் போட்டித் தீபம் அனுராதபுரத்தில் இருந்து மரதன் ஓட்டம் மூலம் தற்பொழுது எடுத்துச்செல்லப்படுகிறது.

இத் தீபம் அனுராதபுரத்தில் இருந்து ஒருநாகல் சென்று அங்கிருந்து கண்டியூடாக சாவ் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ள சுகததாச அரங்கை நாளை 22 ஆம் திகதி சென்றடையும்.

இத்தீபம் கடந்து செல்லும் நகரங்களில் வதியும் வீரர்களே இத் தீபத்தை ஏந்தி ஓடிச் செல்லத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (16)

# மட்டுவைத்தியசாலை அபிவிருத்திக்கு உதவி வழங்கும் நாடுகளின் நிதி!

மட்டக்களப்பு வைத்தியசாலையைப் போதனா வைத்தியசாலை யாக்குவதற்கு உதவி வழங்கும் நாடுகளின் நிதி பயன்படுத்தப்படுமென அறிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலையை தரம் உயர்த்துவதற்கு ஏதுவாக கட்டிட, தளபாட அபிவிருத்தி வேலைகளுக்கென 46 கோடி ரூபா உதவி வழங்கும் நாடுகளின் நிதியிலிருந்து பெறப்படும்.

அத்துடன் மட்டு பல்கலைக் கழகத்தில் அமைக்கப்படவுள்ள போதனா வைத்திய சாலையுடன் தொடர்புடைய பயிற்சிப்பிரிவு அமைப்புக்களுக்கு மேலதிகமாக 16 கோடி ரூபா ஒதுக்கப்படும்.

# மகரகம தேசியக் கல்வி நிறுவன டிப்ளோமாப் பயிற்சி நெறி இங்கு

மகரகமத் தேசியக் கல்வி நிறுவனம் பட்டப்பின் கல்வி டிப்ளோமா நெறியை முதன்முறையாக யாழ் பாணத்தில் இரு நிலையங்களில் நடாத்தவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த 486 பட்டதாரி ஆசிரியர்கள் கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தெரிவாகித் தேசியக் கல்வி நிறுவனத்தில் பதியப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இவர்களுக்கான பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஐந்து தவணைகளைக் கொண்ட 2 வருட பயிற்சி நெறியாக இது மேற்கொள்ளப்படும்.

இந்தப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து கொண்டவர்கள் 1993 ஆம் ஆண்டு யூன் மாதம் தகுதி நிறுவத் தேர்வுக்குத் தோற்ற வேண்டும் எனவும் தேசியக் கல்வி நிறுவனம் அறிவித்துள்ளது (04)

# உலகுக்கு தன்மையைக் கொழும்பு இழக்கிறது! உஷ்ணத்தால் வறண்ட மாநகரமாகிறது அது

கொழும்பின் உஷ்ணம் வருடாவருடம் அதிகரித்து வருகின்றமை வானிலை அவதான நிலையத்தின் கணிப்பொன்றின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த காலத்தை விட கொழும்பு நகரம் தற்பொழுது மேலும் மேலும் உஷ்ணமாகவும், வறண்டும் வருகிறது.

1955க்குப் பின்னர் கொழும்பின் சராசரி வெப்பம் 0·016 டிகிரி சதம பாகையினால் ஏறிச் சென்றுள்ளமை கணிப்பின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

1975 இருந்து கொழும்பின் மழை வீழ்ச்சி ஒவ்வொரு வருடமும் 35.3 மில்லிமீற்றரினால் குறைந்து வருகிறது எனவும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

# இரு வடபகுதி ஆசிரியர்கள் டிக்கோயாவில் கைது!

டிக்கோயாவில் உள்ள பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரிந்து வந்த இரு வடபகுதி இளைஞர்கள் ஹட்டன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் யாழ் மாவட்டத்தையும், மற்றவர் முல்லைத்தீவு மாவட்டத்தையும் சேர்ந்தவராவர்.

தமிழ்த் தீவிரவாதிகளுக்கும் இவர்களுக்கும் தொடர்பு உண்டென பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டது.

# இந்தியாவிலிருந்து 'விபூதி' கொழும்பு வருகிறது!

இந்தியாவிலிருந்து இருபது அந்தர் விபூதி இறக்குமதி செய்யப்படவுள்ளது.

வடபகுதிக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளமையைத் தொடர்ந்து, வடக்கிலிருந்து தென்பகுதிக்கு விபூதி கொண்டு செல்லப்படுவது பாதிக்கப்பட்டுள்ளதினால் அப்பகுதியிலுள்ள இந்து ஆலயங்களில் விபூதிக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் இதனாலேயே இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யும் முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

50 கிலோ பக்கட்டுக்களாக இந்து கலாசார அமைச்சினால் இறக்குமதி செய்யப்படவுள்ள விபூதி தென்பகுதி இந்து ஆலயங்களுக்கு பகிர்ந்து வழங்கப்படும்.

# கலை, இலக்கிய விழிப்புணர்வை பரவலாக்க நடவடிக்கை

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் தனது வட்டவை ரீதியான கலை, பண்பாட்டு அவைகள் மூலம் சகல கிராமங்களிலும் கலை, இலக்கிய, சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையாக கீழே குறிப்பிடும் திட்டங்களைச் செயற்படுத்த விரும்புகின்றது.

1. கிராமங்கள் தோறும் உள்ள இலக்கிய மன்றங்கள், தமிழ்ச் சங்கங்கள், நாடக அமைப்புக்கள், பண்பாட்டு அவைகள், சனசமூக நிலையங்கள் முதலியவற்றுடன் நேரடியான தொடர்புகளை ஏற்படுத்துதல்.

2. கிராமங்களிலுள்ள மேற்குறிப்பிட்ட அமைப்புகள் ஊடாகக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், சமூக மேம்பாட்டை விரும்பும் அனைவருடனும் உறவை ஏற்படுத்துதல்.

3. மாதந்தோறும் அல்லது வாரந்தோறும் ஒரு தடவை கலை, இலக்கிய ஆற்றலை [illegible]கள், செய்முறை வகுப்புகள், களப் பயிற்சிப் பட்டறைகள் போன்றவற்றை மேற்படி அமைப்புக்கள் மூலம் கிராமந் தோறும் நடாத்துதல்.

4. கலை, இலக்கிய அறிவு சார்ந்த படைப்புகளை உருவாக்குவதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தல். தமிழீழத்தில் புரையோடிப் போயிருக்கும் மூடத்தனங்களை மெல்ல மெல்ல இல்லாமற் செய்வதும், பேணப்பட வேண்டிய பண்பாட்டுக் கோலங்களைக் கட்டிக்காத்து எம் சமூகக் கட்டுமானம் இடிந்து போகாமல் பேணிப்பாதுகாப்பதும் இன்னும் பலவும்.

இணைந்து செயல்பட விரும்பும் மன்றங்களோ, அமைப்புகளோ, தனி மனிதர்களோ தங்கள் வட்டவைப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் கலை, பண்பாட்டு அவைகள் மூலமாகவோ, தங்கள் பிரிவுகளை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் ஊடாகவோ விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத் தலைமைச்

# நல்லொழுக்கக் கருத்தரங்கு

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் சனசமூக நிலையங்கள் தமது அங்கத்தவர்களின் தலைவர் செயலாளருக்கு இம்மாதம் 24ஆம் திகதி காலை 9 மணிக்கு சுழிபுரம் "போரூட்" பயிற்சிநிலையத்தில் கருத்தரங்கு ஒன்றை (ஊர்காவற்றுறை, வலிமேற்கு உ. அ. அ) பிரிவு நடாத்தவுள்ளது 18

# செஞ்சிலுவை நத்தார் கீதம்

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுச் செஞ்சிலுவைச்சங்கம், நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ் வேலணை வீதியில் அமைந்துள்ள அதன் பணிமனையில் நத்தார் கீதங்கள் பாடும் நிகழ்ச்சி ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளது.

இப் பிரிவின் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. வின்சென்ட் டலிமா அவர்கள் அருட் திரு ஜெறோம் லம்பேட் அடிகளாரின் ஒத்துழைப்புடன் நத்தார் கீதங்களைப் பாடும் நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்துள்ளார்.

# ஜயந்தி

யோகிராஜ் சுவாமி சச்சிதா


# யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## 1992 ஆம் ஆண்டிற்கான மாணவர்களை சேர்த்தல் பற்றிய

## அறிவுறுத்தல்கள்

1. 5, 6, 7, 8, 9, 10, 11 ஆம் ஆண்டுகளுக்கான புதிய பிரிவுகள் யாவும் 5. 1. 92 ஞாயிறு ஆரம்பமாகின்றன.

ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான மாணவர்களை மட்டுமே அனுமதிக்க முடியுமாதலால் மாணவர்கள் தங்கள் அனுமதியை முன் கூட்டியே உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.

அனுமதிக்க முடியுமாதலால் மாணவர்கள் தங்கள் அனுமதியை முன் கூட்டியே உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.

மாணவர்கள் கீழ்க்குறிப்பிட்ட நேரத்திற்கு எமது நிறுவனத்திற்கு சமுகமளித்து தமது அனுமதியை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

| ஆண்டு | காலம் | நேரம் |
|---|---|---|
| 5 | 23- 12- 1991 | காலை 7 - 30 மணி |
| 6 | 23- 12- 1991 | காலை 8 - 30 மணி |
| 7 | 23- 12- 1991 | மு. ப 9 - 30 மணி |
| 8 | 23- 12- 1991 | மு. ப. 10 - 30 மணி |
| 9 | 23- 12- 1991 | மு. ப 11 - 30 மணி |
| 10 | 23- 12- 1991 | பி. ப 2- 30 மணி |
| 11 | 23- 12- 1991 | பி. ப. 3- 30 மணி |

வகுப்புக்கள் யாவும் மாணவர்களின் வசதிக்கு ஏற்ப வெவ்வேறு பிரிவுகளாக நடாத்தப்படும். நேரசூசிகைகள் 23 - 12 -91 அன்று வழங்கப்படும்.

2. க. பொ. த. உயர்தரம் 93 ஆம் ஆண்டிற்கான கலை, வர்த்தக, விஞ்ஞான பிரிவுகள்

புதிய வகுப்புக்கள் யாவும் 21 - 12 - 91 (சனி) ஆரம்பமாகும்.

கலை, வர்த்தகப் பிரிவு: 21 - 12 - 91 காலை 6 - 15 மணி
விஞ்ஞானப் பிரிவு: 21 - 12 - 91 பி. பகல் 2 - 30 மணி
(கணிதம் உயிரியல்)

யூனிவேர்சல்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
14-12-91

அதிபர்

12062

வாரந்தோறும் ஒரு தடவை கலை, இலக்கிய ஆற்றலை வளர்க்கவும், சமூகப் பற்றுணர்வை விசாலித்து, எம் மண்ணின் விடுதலைக்கான போராட்ட உணர்வை உருவாக்கவும் கலந்துரையாடல் ...

... கைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கலை, பண்பாட்டுக்கழகம் கேட்டுள்ளது.

## சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

'சனி நீராடு'-எண்ணெய் முழுக்குக்கு ஏற்றதென எம் முன்னோர் கண்டபிடித்த இயற்கை மூலப் பொருள்கள் கொண்டு தயாரிக்கப்பட்ட 'ஒலிவ் கிநானப்பவுடர்' ஒரு பக்கற்றின் விலை ரூபா 3/=

பட்டு மே. மிக்கவைற்

12064

### விற்பனைக்கு

மில்க்வைற் திரவ சவர்க்காரம் சிக்கனமானது. துரிதமாகச் செயற்பட்டு அழுக்கை அகற்றிப் பளிச்சிடும் வெண்மை தருகிறது. லேபலுடன் கூடிய வெற்றுப் போத்தல் தந்து விலையில் ரூ. 2/= கழிவு பெறுங்கள். விலை ரூபா 50/=

12057

## ஆசிரியப்பயிற்சி நிலையம்

நாவாலியில் ஆசிரியப் பயிற்சி நிலையம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

## ஜயந்தி

யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தா அவர்களின் ஜயந்தி விழாவும், சிவானந்த சிறுவர் சமயப் பாடசாலையின் 18 ஆவது ஆண்டு விழா நிகழ்ச்சிகளும் நாளை 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பெரியார்கள் பலர் அன்று சொற்பொழிவாற்றுவார்கள்.

## மில்க்வைற் தொழிலக அறிவித்தல்

சவர்க்கார உற்பத்திக்கு அத்தியாவசிய பிரதான மூலப் பொருளான கோஸ்ரிக்சோடா பெற்றுக்கொள்ள இயலாத காரணத்தினால் தொழிலகம் பிற்பகல் 12 30 மணிவரை மட்டுமே இயங்குகிறது.

தொழிலகத்துடன் தொடர்பு கொள்பவர்களை இவ்வேலைநேர மாற்றத்தைக் கவனிக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

அதிபர்

மில்க்வைற் தொழிலகம்
20. 12. 91

12066

(நேற்றைய தொடர்ச்சி)

# பாராளுமன்ற தெரிவுக் குழுவிடம்

## அமைச்சர் தொண்டமானின் யோசனைகள்!

காணி......

பிரதேச சபைக்குள் உள்ள காணி இன விகிதாசார அடிப்படையில் பிரதேச சபை ஒன்றியத்தினால், ஒதுக்கீடு செய்யப்படும்

மாகாண சபையினால் ஒதுக்கீடு செய்யப்படும் காணிகள் ஒரு மாகாண சபையில் வாழும் முஸ்லிம்களின் விகிதாசாரத்துக்கு ஏற்ப அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்

வடக்குக் கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் இம் மாகாணங்களின் எந்தப் பகுதியிலும் காணிகளைக் கொள்வனவு செய்ய உரித்துடையோராவர்

### சட்டம் ஒழுங்கு

பிரதேச சபை ஒன்றியத்துக்குரிய பொலிஸ் படையின் தொகையை மாகாண அரசு நிர்ணயிக்கும். இப்படி நிர்ணயிக்கும் போது பிரதேச சபை ஒன்றியத்தின் கீழுள்ள சனத்தொகை, பரப்பளவு, பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை என்பவற்றைக் கவனத்திற் கொள்ளும். பொலிஸ் படையில் பத்தாயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

பிரதேச சபை ஒன்றியத்தில் கடமை ஆற்றும் பொலிஸ் படையினர் மூன்றாம் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் (D. I. G) கட்டுப்பாட்டிற்குள்ளும், அவரின் பணிப்பின் கீழும் இயங்குவர்.

இவர் (D. I. G) மாகாண பொலிஸ் மா அதிபரின் கீழ் செயற்படுவர்.

### நிதி

கீழ்க்காணும் வழிகளில் மாகாண சபைக்குரிய நிதி பெறப்படும்,

1. மானியம்
2. வரி
3. நிதி நிறுவனங்கள்
4. வெளிநாட்டு உதவி

வடகிழக்கு மாகாணசபை எப்படி மத்திய அரசிடமிருந்து நிதி பெறுகின்றதோ அதே மாதிரி முறையில் பிரதேச சபை ஒன்றியமும் பெறும்.

பிரதேச சபை ஒன்றியத்துக்கு நிதி நிறுவனங்களை அமைப்பதற்கு அதிகாரம் வழங்கப்படும்.

### வெளிநாட்டு உதவி

மாகாண அரசின் அனுமதியுடன் சர்வதேச அமைப்புகளிடமிருந்தும் ஐக்கிய நாடுகள் சபையின் பிரிவுகளிட...

### சிங்களச் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு

மாகாணத்தில் உள்ள மற்ற சிறுபான்மையின மக்களிலும் பார்க்க சிங்கள சிறுபான்மையின மக்களின் நிலை மாறுபட்டது. மத்திய அரசு அம் மாகாணத்திலுள்ள சிங்கள மக்களின் பாதுகாவலனாகத் திகழ்வதுடன் அவர்களுடைய முறைப்பாடுகளைக் கேட்டு நிவர்த்தி செய்கிறது. இருப்பினும் வட கிழக்கு மாகாண சபை அரசு சிங்கள சிறுபான்மையின மக்கள் நலன்களையும் பாதுகாக்க வேண்டிய கடமைப் பாட்டிலுள்ளது.

ஸ்ரீலங்காவின் எப்பகுதியில் வாழும் சிங்கள மக்களும் வட, கிழக்கு மாகாணங்களில் சொத்துக்கள் வைத்திருக்கும் உரிமை மாற்றப்பட மாட்டாது.

வட, கிழக்கு மாகாணங்களில் உள்ள காணிப் பங்கீடுகள் இன விகிதாசார அடிப்படையில் அமையும்

மகாவலித்திட்டத்தின் கீழ் வரும் காணிகள் 1986 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகளின்படி பங்கீடு செய்யப்படும்.

சிங்களப் பொலிஸ் உத்தியோகத்தினரின் தொகை மாகாணத்திலுள்ள சிங்கள விகிதாசாரத்தின் அடிப்படையில் அமையும்.

சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில், பிரதேச சபைகளின் இன விகிதாசார அடிப்படையில் பொலிஸ் உத்தியோகத்தர் நியமிக்கப்படுவர்.

வட. கிழக்கு மாகாணத்திற்கு ஒரு சிங்கள பிரதி பொலிஸ் மா அதிபர் இருப்பார். அவர் வட. கிழக்கு மாகாண பொலிஸ் மா அதிபரின் கீழ் கடமையாற்றுவார்.

சிங்களவர்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளுக்கு சுயாட்சி அமைப்பு போதிய நிதியைக் கொடுக்க வேண்டும்.

சிங்கள மக்களின் மொழி, கலாசாரச் சுதந்திரங்கள், பேணப்பட வேண்டும்.

அவர்களுடைய மொழியையும், கலாசாரத்தையும் வளர்ப்பதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

### அதிகாரப்பரவலாக்கம்

களை மாகாண அரசே தீர்மானித்தல் வேண்டும் அப்படிச் செய்யும்போது இலங்கை சுதந்திரமடைந்த வேளை அப்பகுதிகளில் அப்போது இருந்த குடிசனத்தொகையைக் கருத்திற்கொண்டு இன விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

6. மாகாண அரசு காணிக் கொள்கைகளை வகுப்பதற்கு காணி ஆணைக்குழு ஒன்றை உருவாக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும்.

7. இந்த ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் பொறுப்பு மாகாண அரசின் அமைச்சரவைக்கு உட்பட்டதாகும்

### சட்டம் ஒழுங்கு

1. வட, கிழக்கு மாகாணத்துக்கு ஒரு பொலிஸ் படையை அமைப்பதற்கு மாகாண அரசுக்கு அதிகாரம் உண்டு.

2. இந்தப்பொலிஸ்படைக்கு பொலிஸ் மா அதிபர். பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களும் மற்றும்உத்தியோகத்தர்களும் நியமிக்கப்படுவர்.

3. மாகாணத்தில் உள்ள குடிசனத்தொகையும், அங்குள்ள பொலிஸ் நிலையங்களையும் கருத்தில் எடுத்து மாகாண பொலிஸ் படைக்குரியதொகையினர் நிர்ணயிக்கப்படுவர்.

4. இந்தப் படைக்கு உடனடியாக 10.000 பேர் நியமிக்கப்படுதல் வேண்டும் இந்த நியமனங்கள் மூன்று வருட காலத்துக்குள் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

5. மாகாணத்திலுள்ள இன விகிதாசாரத்தைப் பிரதிபலிப்பதாகப்பொலிஸ்படை அமைதல் வேண்டும்.

6. மூழு மாகாணத்திற்கும் ஒரு பொலிஸ்படை இருக்கும்.

7. பொலிஸ் படையினர் சம்பந்தப்பட்ட நியமனங்கள், மாற்றங்கள், பதவி நீக்கங்கள் ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆகியவை மாகாண அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டதாகும்.

8. மாகாணத்தில் கடமையாற்றும்சகல பொலிஸ் உத்தியோகத்தர்களும் மாகாணப் பொலிஸ் மா அதிபரின் கட்டளைக்குக் கீழ்ப்பட்டவர்கள்.

9. மாகாணத்தின் பொலிஸ் மா அதிபர் மாகாண முதலமைச்சரின் கட்டுப்பாட்டுக்கு அடங்கியவராவர்

### விடுதலைப் புலிகளின்

விக்குத் திட்டம்.

இ. வெளிநாட்டு, உள்நாட்டு முதலீடுகளை வழிப்படுத்தலும், ஊக்குவித்தலும்.

ஈ. நிதித்துறையை அபிவிருத்தி செய்யத் திட்டமிடல்.

உ. மாகாண அரசின் அமைச்சரவையினால் திட்ட ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

ஊ. மாகாணத் திட்ட ஆணைக்குழுவின் தலைவர் முதலமைச்சரின் பணிப்பின் இணங்கக் கடமையாற்றுவார்.

### நிதி ஒழுங்குகள்

1. மத்திய அரசின் நிதியில் இருந்து மாகாண அரசுக்கு தேவையான நிதி வழங்கப்படல் வேண்டும். இது அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்

2. இதேபோன்று அரசியல் யாப்பு மூலம் உறுதிப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நிதியும் மாகாண அரசுக்கு வழங்கப்படல் வேண்டும்.

3. வழங்கப்படும் தொகை வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் காட்டப்படும் தேசிய மொத்த உற்பத்தியின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும்.

வெளிநாட்டு உதவி பெறுவதற்கும் பேச்சு வார்த்தை நடாத்த மாகாண அரசுக்கு அதிகாரம் இருக்கும்.

மாகாண அரசின் நிதி மாகாண அரசின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும்.

மாகாண அரசின் நிதி மாகாணக் கட்டு நிதியாக இருக்கும். இந்த நிதியில் சகல வரிகளும் மற்றெல்லா வகையான வருமானங்களும் உள்ளடங்கும்.

இப்படி வருமானங்கள் பெறக்கூடிய முப்பது துறைகள் உள்ளன. (வளரும்)

## புதிய நியமனம்

யாழ் செயலகத்தில் மாகாண அரசின் நிர்வாகங்களை மேற்கொள்வதற்குப் புதிய நிர்வாக அதிகாரி ஒருவர் மாகாண அரசினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநரின் அலுவலக நிர்வாக அதிகாரியாக இருந்து பின்னர் உடுவில் உதவி அரசாங்க அதிபராக நியமனம் பெற்ற வி. வீரபத்திர பிள்ளையே யாழ் செயலக மாகாண அரசின் நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டவராவர். (11)

## மாட்டுச் சாணத்திலிருந்து மின்சார உற்பத்தி

அமெரிக்காவில் கலிபோர்ணியாவைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று மாட்டுச் சாணத்தில் இருந்து மின்சாரத்தைத் தயாரிக்கிறது.

இந்த ஆலையில் மாட்டுச் சாணமானது ஒரு 'கொன்வேயர் பெல்ட்' (Conveyor Belt) மூலம் அனுப்பப்படுகிறது.

இந்த பெல்ட் மீது மாட்டுச் சாணத்தைத் தானியங்கி இயந்திரங்கள் எடுத்துப் போடுகின்றன கொன்வேயர் பெல்ட் டைப் பல உலைகளின் இடையே செலுத்துவதன் மூலமாக அதிலுள்ள சாணம் நன்கு உலர்த்தப்படுகிறது.

பின்பு இந்த மாட்டுச் சாணம் நுண்மையான பொடியாக்கப்படுகின்றது. அந்தப் பொடியுடன் தண்ணீரைக் கலந்து எரிய விடுகிறார்கள்.

இதன் மூலம் ஒரு மணிக்கு 67,500 கிலோ கிராம் நீராவி உற்பத்தி செய்யப்படுகிறது, இந்த நீராவியைக் கொண்டு ஒரு டர்பைனையும், மின்சார ஜெனரேட்டரையும் இயக்க வைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்கிறார்கள்.

இதில் மிச்சமாகி நிற்கும் சாம்பலை நன்கு வடிகட்டி எருவாக்கி விற்பனை செய்கிறார்கள்.

கலிபோர்ணியாவின் 'மிக்வேகிலி' பகுதியில் உள்ள The mesqulite Lake Resource Recovery Project என்னும் நிறுவனமே இவ்வாறு மாட்டுச் சாணத்திலிருந்து மின்விசையைத் தயாரிக்கிறது.

National Energy Associates Inc. எனும் அமைப்பு இந்த நிறுவனத்தை நடத்துகிறது. இந்த ஆலையில் ஒரே சமயத்தில் 1,200 தொன் மாட்டுச் சாணத்தை மின்சாரமாக மாற்ற இயலும்.

இங்கு உற்பத்தியாகும் மின்சாரம் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்குச் சப்ளை செய்யப்படுகிறது.

இவ்வாறு மாட்டுச் சாணத்தில் இருந்து வர்த்தக அடிப்படையில் மின்விசை தயாரித்துச் சப்ளை செய்யும் நிறுவனங்களில் உலகிலேயே இதுதான் முதலாவதாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

நன்றி: தினமணிச் சுடர்
தொகுப்பு: பிரவீணன்

## 'அடிலேட்' கிரிக்கெட் தொடரில் ஆஸி அணிக்கு வெற்றி வாய்ப்பு!

சிட்னி நகரில் அவுஸ்திரேலிய அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஒருநாள் சர்வதேச 'அடிலேட்' கிரிக்கெட் பந்தயத்தில் அவுஸ்திரேலிய அணி 51 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

அவுஸ்திரேலிய அணி அதன் துடுப்பாட்டத்தில் 50 பந்து மாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 234 ஓட்டங்களைப் பெற்றது மேற்கிந்தியத் தீவுகள் அணி அதன் துடுப்பாட்டத்தில், 46 9 பந்து மாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 183 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இதுவரை நடந்து முடிந்த போட்டிகளில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்தியாவுக்கு எதிரான ஒரு ஆட்டத்தை மாத்திரம் வெற்றி தோல்வி அற்றதாக்கியுள்ளது. அதன் பின் இடம்பெற்ற இந்தியாவுக்கு எதிரான 2 ஆட்டங்களிலும், அவுஸ்திரேலியாவிற்கு எதிரான 3 ஆட்டங்களிலும் தோல்வியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (16)

## பிரிட்டிஷ் படையில் கூர்க்காக்களுக்கு 'டாட்டா'

## விளைவு; நேபாளத்தில் வேலையில்லாத் திண்டாட்டம்!

பிரிட்டன் தற்போது ... றனர் புருனை, சிங்கப்பூர் ... வது கூர்க்கா வீரர்கள் பணி

விட்டமிருந்தும் இச்சபை நாடு
கள் சபையின் பிரிவுகளி
லிருந்தும் நிதி பெறுவதற்கு
உரிமை உண்டு.

## பொதுச் சேவை

மாகாணப் பொதுச்சேவை கீழ்க் குறிப்பிட்டோரை உள்ளடக்கும்.

1. மத்திய அரசு சேவையிலிருந்து மாகாண சபையின் சேவைக்குக் கடமையாற்ற அனுமதிக்கப்பட்டவர்கள்.

2. மாகாணப் பொதுச் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள்.

பிரதேச சபைக்குத் தேவையான அதிகாரிகள் மத்திய அரச சேவையிலிருந்தும் மாகாண பொதுச்சேவையிலிருந்தும் பிரதேச சபை ஒன்றியத்தின் தேவைக்கு அமைய பெறப்படும்.

பிரதேச சபை ஒன்றியத்துக்கு ஆட்களைச் சேர்க்கும் போது மாகாணங்களிலுள்ள இன விகிதாசார அடிப்படை கருத்திற் கொள்ளப்படும்.

## கல்வி

மாகாண சபை ஒன்றியம் கல்வி வளர்ச்சியிலும், பாடப் புத்தகங்களைத் தெரிவு செய்வதிலும், கல்வி நிலையங்களை நிறுவுவதிலும் அதிகாரமுடையதாயிருக்கும்.

## அதிகாரப்பரவலாக்கம்

சுயாட்சி அமைப்புக்குக் கொடுக்கப்படும் அதிகாரங்களையும் கடமைகளையும் பொறுத்தே அது அந்தஸ்தும் வலுவும் பெறுகிறது. இதன் பொருட்டு அரசியல் யாப்பில் திருத்தம் கொண்டுவரப்படும் போது நமது திருத்தச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள மாகாணம் பட்டியலில் மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

## மாகாணப் பட்டியல்

காணி

1 மாகாணத்திலுள்ள அரச காணிகள் மாகாண அரசுக்கு உரிமையாக்கப்படும்.

2. மாகாணத்துக்குள் அடங்கிய காணிகளை மாகாண அரசு பரிபாலிக்கவும், உபயோகிக்கவும் முடியும்.

3. இக்காணிகளைமாகாண அரசு விற்கவோ குத்தகைக்கு விடவோ அதிகாரம் உண்டு.

4. மாகாணத்துக்குள் அடங்கிய அரச காணி மத்திய அரசுக்குத் தேவைப்படும் பட்சத்தில் மாகாண அரசின் அனுமதியுடன் உபயோகிக்கலாம்

5 நீர்ப்பாசனக் குடியேற்றத் திட்டங்களில் குடியேற்றப்படுபவர்

## விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை இராணுவ பொலிஸ் படைக்குச் சேர்த்தல்

1. நாட்டின் பொலிஸ்படை கீழ் குறிப்பிட்ட வண்ணம் அமையும்

அ. தேசிய பொலிஸ் படை

ஆ. மாகாண பொலிஸ் படை

தேசிய இன விகிதாசார அடிப்படையில் தேசிய பொலிஸ் படை அமையும். மாகாண பொலிஸ் படை மாகாண இன விகிதாசார அடிப்படையில் அமையும்.

2.இதே அடிப்படையிலேயே தீவிரவாத உறுப்பினர்கள் இராணுவ படைக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

## திட்டமிடலும் பொருளாதாரமும்

1. மாகாண திட்ட ஆணைக்குழு ஒன்றினை அமைப்பதற்கு மாகாண அரசுக்கு அதிகாரம் இருக்கும்.

2 மாகாணத் திட்ட ஆணைக்குழு கீழ் வருவனவற்றை நடைமுறைப்படுத்தும்.

(அ) மாகாணப் பொருளாதாரத் திட்டம்,

ஆ பொது, தனியார் முத

---

பிரிட்டன் தற்போது தனது இராணுவத்திலிருந்து கூர்க்காப் படையினரை வெகுவாகக் குறைத்துள்ளது,

இதனால் நேபாளத்தில் வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்துள்ளது.

பிரிட்டிஷ் இராணுவத்தில் பெரும்பாலானோர் கூர்க்கா அணியினர் ஆவர். ஐ நா. அமைதி காக்கும் படையிலும் ஒரு லட்சம் கூர்க்கா வீரர்கள் பணியாற்றுகின்றனர்.

இதைவிட பப்புவாநியூகினியில் 5000வீரர்கள் பணிபுரிகின்றனர் புருனை, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் சிறிதளவு கூர்க்கா வீரர்கள் பணியாற்றுகின்றனர். (22)

# மலையகத்தில் ஒரு லட்சம் இந்திய கடவுச்சீட்டு பெற்றோர்

மலையகத்தோட்டப் பகுதிகளில் இந்தியக் கடவுச் சீட்டு பெற்றோர் சுமார் ஒரு லட்சம் பேர் தற்பொழுது உள்ளனர்.

இவர்களில் அநேகமானோர் பெருந்தோட்டங்களில் கடமைபுரிந்து வருகின்றனர்.

இவர்கள் தாம் விரும்பிய போது இந்தியாவுக்கு திரும்பிச் செல்ல முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

## மணிவாசகர் விழா

காரைநகர் மணிவாசகர் சபையின் ஆதரவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் நாளை பிற்பகல் 1. 30 மணிக்கு வாசகர் விழா நடைபெறவுள்ளது.

பண்டிதர் மு. சு. வேலாயுத பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்கள்.

க. பாலசுப்பிரமணியம், இ. ஜெயராஜ் ஆகியோரின் சொற்பொழிவுகளும் வேறு நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

# இந்திய-பாக் எல்லைப் பகுதியில் படை குவிப்புப் ‘போட்டி’!

பாகிஸ்தானுக்கும்-இந்தியாவுக்கும் இடைப்பட்ட பஞ்சாப் மாநில எல்லைப் பகுதிகளில் இந்தியாவும், பாகிஸ்தானும் போட்டி போட்டுக்கொண்டு படைகளைக் குவித்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பஞ்சாப் மாநில எல்லைப் பகுதியில் இந்தியா ஒன்றரை லட்சம் துருப்புக்களை மேலதிகமாகக் குவித்துள்ளதாக பாகிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது.

ஆனால் இந்தியா இதனை மறுத்துள்ளது. அப் பகுதிக்கு 39 ஆயிரம் படையினர் மட்டுமே மேலதிகமாக அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறியுள்ள இந்தியா, பாகிஸ்தான் தான் படைக்குவிப்பில் ஈடுபட்டு வருவதாகப் பதிலுக்குக் குற்றம் சாட்டியுள்ளது.

# கஷ்டங்களை எதிர்நோக்கும் அச்சுவேலிப் பகுதி அகதிகள்

வலலாய், இடைக்காடு, தம்பாலை, கதிரிப்பாய், பத்தைமேனி, அச்சுவேலி பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கி இருக்கும் மக்கள் தமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் கஷ்ட நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயத்தை நம்பியே வாழ்ந்து வருபவர்கள். தற்போதைய சூழ்நிலையில் விவசாயம் முழுவதையும் கைவிட்டு வேறு தொழில் இன்றி இவர்கள் பெரிதும் கஷ்டப்பட்டு வருகின்றதைக் காண முடிகிறது.

சில முகாம்களில் உள்ள மக்கள் நேற்று முன்தினம் கோப்பாய் அகதி அரச அதிபர் அலுவலகத்திற்குச் சென்று தமக்கு வழங்க[illegible] கள் முடிந்து விட்டதாகவும், தொடர்ந்து உணவு வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் உதவி அரச அதிபரைச் சந்தித்து நேரில் கேட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை முகாம்களில் சுகாதாரச் சீர்கேடுகள் அதிகரித்துள்ளதாகவும், மலசல கூட வசதிகள் கூட சில முகாம்களில் செய்யப்படவில்லை யென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பலருக்கு நோய்கள் பரவிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அகதிகளுக்கு ஆரம்பத்தில் மூன்று நாட்கள் சமைத்த உணவும் ஒரு வாரம் இலவச உலர் உணவும் வழங்கப்பட்டது.

சில தொண்டர் நிறுவனங்களும் ஓரளவு நிவாரண உதவிகளைச் செய்ததாகவும் தெரிய வருகிறது.

ஆனால் இந்த உதவிகள் தமக்குப் போதாதிருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (06)

## விவசாயிகளை ஊக்குவிக்க மேலும் விதை தானியங்கள்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு மேலும் விவசாயத்தை ஊக்குவிக்கும் பொருட்டு சிறுதானிய விதைகளை வெளிமாவட்டங்களிலிருந்து கொள்வனவு செய்து இலவசமாக வழங்கி வருகிறது.

சோளம், கௌபி, எள்ளு, பயறு, உழுந்து, குரக்கன் போன்ற சிறுதானியங்கள் ஒவ்வொரு பிரிவுக்கிளைக்கும் துரிதமாக வழங்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே மரக்கறி விதைகளும் வழங்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (06)

## இடம் பெயர்ந்தவர்களுக்கு சமையல் பாத்திரங்கள்

வலலாய், இடைக்காடு, தம்பாலை, கதிரிப்பாய், பத்தைமேனி, அச்சுவேலிப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து கோப்பாய் அகதி முகாம்களில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கு சமையல் பாத்திரங்களை செஞ்சிலுவைச் சங்கம் வழங்கவிருக்கிறது.

எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ் கிளையினர் கோப்பாய் பிரிவுச் செயலகத்தின் உதவியுடன் முகாம்களுக்குச் சென்று பாத்திரங்களை கையளிக்கவுள்ளனர்.

இப்பாத்திரங்கள் கையளிக்கும் முகாம்களுக்கு இவர்களுடன் சர்வதேச செஞ்சிலுவைப் பிரதிநிதிகளும் செல்லவுள்ளதாக தெரியவருகிறது. 06

## விவசாயிகளிடம் குரக்கன் நியாயவிலையில் பெற ஏற்பாடு

இவ்வாண்டில் விவசாயிகள் குரக்கன் பயிர்ச்செய்கையில் காட்டியுள்ள ஆர்வத்தினால் குரக்கன் நல்ல விளைவைத் தந்துள்ளது. பயிர்ச்செய்கைக்கான உற்பத்திச்செலவு அதிகமாக இருந்தமையால் இன்றைய சந்தைவிலை உற்பத்திச் செலவையே ஈடு செய்யப் போதியதாக இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூர் உற்பத்தி பாதிக்கப்படாமல் இருக்கவேண்டுமாயின் விவசாயிகளுக்கு குரக்கனுக்கு நியாயமான விலை கிடைக்க வழிகாண வேண்டியுள்ளது. இதன் நிமித்தம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் விவசாயிகளிடம் உள்ள குரக்கனுக்கு நியாயமான விலையாக குறைந்த பட்சம் 28 ரூபாவிடைக்கக் கூடியதாக 30 ரூபாவுக்கு கொள்வனவு செய்கிறது.

கொள்வனவு செய்யப்படும் குரக்கன் மாவாக்கப்படுகிறது. ஒரு கிலோ குரக்கன் மாவாக்கும்போது 35 ரூபா குரக்கன் மாவின் விலையாகிறது.

குரக்கன் பாவனையை ஊக்குவிக்கு முகமாக ஒரு கிலோ குரக்கன் மாவை 28 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

## தேடப்படும் தோட்ட இளைஞர்களை பொலிஸில் ஒப்படைக்கப் பணிப்பு

ஊவா மாகாணத்தில் தேடப்படும் தமிழ் தோட்டத் தொழிலாளர்களை தோட்ட தொழிற்சங்கங்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்க வேண்டுமென ஊவா மாகாண முதலமைச்சர் பணித்துள்ளார்.

தற்பொழுது அப்பகுதியைச் சேர்ந்த சுமார் 80 தமிழ்த் தோட்ட இளைஞர்கள் பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை ஊவாப்பகுதி தோட்டங்களில் ஏற்கனவே கைது செய்யப்பட்ட பலர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

### சினைப்பர்...

கடந்த ஒருவாரத்தில் சினைப்பர் தாக்குதலில் பலியான படையினரின் தொகை நேற்றுடன் 31ஆக அதிகரித்

### கிளிநொச்சி...

பல தடவைகள் அறிவித்தும் பயனில்லை யென்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சியில் நுளம்புத்தொல்லை அதிகரித்துள்ளதால் மீண்டும் மலேரியா நோய் பரவும்

### மேற்கு...

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் ஆகியோர் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர்.

## இந்தியப் பிரதமர் காலை வருவார்

மாநாட்டில் கலந்துகொள்ள இந்தியப் பிரதமர் இன்று காலை 8-45 மணியளவில் கொழும்பு வந்து சேருவார் என பி, ரி, ஐ, செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

பிரதமர் நரசிம்மராவ் ஏற்கனவே புதுடில்லியை விட்டு புறப்பட்டுவிட்டதாகவும் கோவாவில் தங்கி இவர் கொழும்பு புறப்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

### மாவீரர்...
### இடம்பெறும்

தீவகத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்துள்ள தீவக மாணவர்[illegible] பாடசாலை உபகரணங்[illegible] உடுபுடவைகளுக்கா[illegible]யைத் திரட்டுவதே இக்கலை நிகழ்ச்சியை ஒழுங்கு ப[illegible]மைக்கான நோக்கம் என சங்கஉறுப்பினர் ஒருவர் வித்தார்.

### நக்ஸலைட்டுக...

முன் தினமிரவு கரீம் நகர்ப் பகுதியில் பஸ் வண்டி மீது இக்குழுவினர் நடத்திய கண்ணிவெடித்தாக்குதலில் நான்கு பொலிஸ அதிகாரிகள் கொல்

## கர்நாடகத்திடம் நஷ்டஈடு தமிழகம் கோருகிறது!

கர்நாடகத்தில் இடம் பெற்ற வன்செயலினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு கர்நாடக அரசு நஷ்டஈடு வழங்க வேண்டுமெனத் தமிழக அரசு கேட்டுள்ளது.

இதற்கு முன்னோடியாக கர்நாடகத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்களின் பூரண விவரங்களைச் சேகரிக்குமாறு அதிகாரிகளைத் தமிழக அரசு பணித்துள்ளது.

இந்த விவரங்களைப் படியல் படுத்தி விவரமாக கர்நாடக அரசுக்கு அனுப்பி நஷ்டஈட்டைப் பெற நடவடிக்கை யெடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

### வீரச்சாவு

ஆனையிறவுப் பகுதியில் 20 07.91 அன்று நடைபெற்ற மோதலில் காயப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த சுஜோ பெருமாள் பானுமதி, காங்கேசன்துறை, தற்போதைய முகவரி: பாஸ்கரன் வீதி, மல்லாகம் 19 12 91 இல் வீரச்சாவு அடைந்தார். இவருக்கு புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்

### பலிகலைக்...

அவனதிற்குக் கொண்டுவருமாறும் அதிபர்களைக் கேட்டுக்கொண்டார். 18

### 45 ஆயிரம்...

முவைத திருப்தியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

அநேகமானோர் வீட்டுப்

### சார்க் மாநாடு;

## ஜே. ஆர் ஸ்ரீமாவோ ஆகியோருக்கு அழைப்பு

இன்று நடைபெறவுள்ள சார்க் உச்சிமாநாட்டிற்கு சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன எதிர்க்கட்சித்தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆகியோரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

### சத்துணவுத்திட்டம்

மேற்படி திட்டத்தினை அமுல்படுத்தும் நோக்குடன் வதிவிடத் தோட்ட ஸ்ரீவாக்கத்துக்காக விதைகள் இலவசமாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் விநியோகிக்கப்படுகின்றன.

விதைகளை பெற விரும்பும் சனசமூக நிலையங்கள் கிராம

## விவசாயக் கடன்கள் இனிமேல் அமைப்புக்களுக்கே வழங்கப்படும்

விவசாய நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் கடன்கள் இனிமேல் விவசாய அமைப்புக்களுக்கே வழங்கப்படும்.

பாராளுமன்றத்தில் விவசாய அபிவிருத்தி அமைச்சர் தர்மதாச இத்தகவலைத் தெரிவித்தார்.

விவசாய அமைப்புக்கள் இந்த உதவிகளைப் பின்னர் விவசாயிகளுடன் பகிர்ந்து கொள்ளும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## படையினர் தாக்குதல்

நேற்று முன்தினம் முற்பகல் வேளையில் பலாலியிலிருந்து படையினர் கட்டுவன், குப்பிளான் பகுதிகளை நோக்கி ஷெல்தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இப்பகுதிகளில் படையினர் தினமும் துப்பாக்கிப்பிரயோகத்தினையும் மேற்கொண்டு வருகின்றனர்.

வளலாய், இடைக்காடுபகுதிகளில் நிலைகொண்டிருக்கும் படையினர் குடிமனைகளை நோக்கி நேற்றுமுன்தினம் துப்பாக்கிபிரயோகத்தினை மேற்கொண்டனர். (07)

### வாராந்தக் கருத்தரங்கு

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெற்று வரும் வாராந்தக் கருத்தரங்கு நாளை 22-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு கோண்டாவிலுள்ள கலை, பண்பாட்டுக்கழக தலைமைச் செயலக கேட்போர்கூடத்தில் இடம்பெறும்.

இவ்வார அமர்வில் ‘முதுபெரும் எழுத்தாளர்’ வரதர்

கடந்த ஒருவாரத்திக் சினைப்பர் தாக்குதலில் பலியான படையினரின் தொகை நேற்றுடன் 31ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை கிளிநொச்சியில் நுளம்புத்தொல்லை அதிகரித்துள்ளதால் மீண்டும் மலேரியா நோய் பரவும் அபாயம் தோன்றியுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் நுளம்பை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாதிருப்பதாகப் பொது மக்கள் தெரிவித்துள்ளனர். (14)

### மாகியப்பிட்டியிலே...

செல்லத்துரை றஞ்சன் (33) என்பவரே படுகாயமடைந்தவராவார். பலவீடுகளும் சேதமடைந்துள்ளன. (07)

பகுதியில் பஸ் வண்டி மீது இக்குழுவினர் நடத்திய கண்ணிவெடித்தாக்குதலில் நான்கு பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டனர்,

பொலிஸாரின் அடக்குமுறைகளை கண்டித்தே நினைவுக் கூடாக இந்த ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

### ஏற்பு...

பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ளதனால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மிக அவசரமான நோயாளர்களுக்கே ஊசி மூலம் ஏற்றப்படுகிறது,

அடுத்துவரும் சப்பலில் ஏற்புத்தடுப்பூசி மருந்து தருவிக்கப்பட்டதும் தொடர்ந்து போடப்படும் என வெளிநோயாளர் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன. (07)

### சோவியத்தின்

பல முக்கிய துறைகளை (கே. ஜி. பி உளவுத்துறை உட்பட) தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளார்,

## நேட்டோவில் இணையும்?

இதேசமயம் நேட்டோ அமைப்பிலும் தமது குடியரசு இணைவதனை சேர்த்துக் கொள்ளுமாறு யெல்சின் கேட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது,

### 45 ஆயிரம்...

தொகை திருப்பியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

அநேகமானோர் வீட்டுப் பணிப் பெண்களாகவே அங்கு வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

### ஆயர்...

பொழுது உரையாற்றியமறை மாவட்ட முதல்வர் வணபிதா எம். ஏ. மைக்கல் சாமி கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் ஆயர் திறிலதுவன் நற்செய்தியை பரப்ப நமது கலை கலாச்சார பண்பாட்டையும் ஒரு கருவியாகப் பாவித்துள்ளார்

அருமைத்திரமகிலகவியின் மேம்பாட்டிற்காக பல நூல்களையும் எழுதியுள்ளார் அவரின் காலமும் சேவையும் நிச்சயமாக பொன் எழுத்துக்களால் சரித்திர ஏட்டில் பொறிக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

ஆண்டகையுடன் அவரின் விருப்பத்தின் பேரில் தமது குருத்துவ சேவையின் வெள்ளிவிழாவைக் கொண்டாடும் வண பிதாக்கள் பி. எம் நிம் மனுவேல், எஸ். எம் செல்வரட்னம், எஸ் பிலிப்ஸ், ஆர் மகேந்திரன் (யூ. எஸ்: ஏ) இவ்வைபவத்தில் இணைந்து கொண்டனர். 16

செஞ்சிலுவைச் சங்கத்தினால் விநியோகிக்கப்படுகின்றன.

விதைகளை பெற விரும்பும் சனசமூக நிலையங்கள் கிராம அபிவிருத்தி சங்கங்கள், தனியார் நிறுவனங்கள், கல்வி நிலையங்கள், பொது ஸ்தாபனங்கள் செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன,

செயலக கேட்போர்கூடத்தில் இடம்பெறும்.

இவ்வார அமர்வில் 'மூத்த பெரும் எழுத்தாளர்' வரதர் அவர்கள் ''எனது எழுத்துலக வாழ்வு'' என்ற பொருளில் கருத்துரையாற்றுவார் அனைவரும் தவறாது பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.


## "நற்செய்திக் கானங்கள்"

★ மார்கழித் தென்றலில் தவழ்ந்து வரும் இனிய கானம்.

★ உங்கள் உள்ளங்களை உவப்பாக்கும் நத்தார் கீதம்.

★ வாருங்கள் மகிழ் கொண்டாடுங்கள்.

எங்கே? கைலாசபதி கலையரங்கம் யாழ் பல்கலைக்கழகம்

எப்போது? 21-12-91 மாலை 3-30 மணிக்கு

(22.12.91 என ஏற்கனவே அறிவித்தது போல் அல்ல)

பிரவேசம் - இலவசம்

12068 போதகர் எல். ஜே. மத்தியூஸ்



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளை

## பத்திரிகை எழுத்தாளர் (JOURNALIST) பயிற்சி

மேற்படி பயிற்சிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆகக்குறைந்த தகைமை: க. பொ. த. (சாதாரண) தரத்தில் ஆங்கிலத்திலும் தமிழிலும் திறமைச் சித்தி உட்பட ஆறு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும், வகுப்புக்கள் கட்டணம் ஏதும் இன்றி வார இறுதி நாள்களில் நடைபெறும். தேர்ந்தெடுப்பதற்கான எழுத்துப் பரீட்சை 28 12. 1991 பிற்பகல் 1 30 மணிக்கு எமது பணிமனையில் நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்பட மாட்டாது

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளை.

73, கண்டி வீதி.
யாழ்ப்பாணம்,
20. 12. 1991.

12069



இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில்21- 12- 1991இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.